விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 மாசி 7 ஜ- அவ் 27 இதழ் 8
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 18-2-1985

## ஆத்திரமூட்டும் நடவடிக்கை தொடர்ந்தால்
# இந்தியா பதில் நடவடிக்கை!

(புதுடில்லி)

இந்தியாவை ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை இலங்கை நிறுத்தாவிட்டால் பதில் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும் என்று வெளியுறவு அமைச்சின் செயலாளர் திரு. ராமேஷ் பண்டாரி தெரிவித்துள்ளார்

அண்மையில் இந்திய மீனவர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டமை குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தியக் கடற்பிரதேசத்தில் ஊடுருவி, தமிழகமீனவர்களைத் தாக்கியவர்கள் இலங்கைக் கடற்படையினர்தான் என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதாகவும் அவர் கூறினார்.

## இந்தியா மீண்டும் விளக்கும்

[ஜெனிவா]

இலங்கை இனப்படுகொலைகள் குறித்து சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு முன் மீண்டும் இந்தியா எடுத்துரைக்கவுள்ளது.

1983ம் ஆண்டு ஜூலைமாதம் இலங்கையில் இடம்பெற்ற இனக் கலவரத்தையடுத்து,

[5-ம் பக்கம் 4-ம்கலம் பார்க்க]

● உமா மகேஸ்வரன் பத்திரிகையாளரிடம் வெளியிட்ட தகவல்——

# ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்துவிட்டனர்!

[சென்னை]

தமிழீழ விடுதலை இயக்கங்கள் அனைத்தும் ஒற்றுமைப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (புளொட்) செயலாளர் நாயகம் திரு. உமா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இயக்கங்கள் அனைத்தும் ஒற்றுமைப்படவேண்டிய அவசியத்தை உணர்ந்துவிட்டதாகவும் திரு. மகேஸ்வரன் தெரிவித்தார்.

சென்னையில் பத்திரிகையார்களிடம் இத்தகவலைத் தெரிவித்த திரு உமா மகேஸ்வரன் தமிழ் மக்கள் தற்போதுஅனுபவித்துவரும் கஷ்டங்களை விளக்கும் தொலைக் காட்சிப் படம் ஒன்றையும் பத்திரிகையாளர்களுக்கு போட்டுக் காண்பித்தார்.

அரசும், புத்தபிக்குகளும் கூறுவதுபோல் தீவிரவாதிகள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்களல்ல என்றும் அவர் கூறினார்.

## தூதுவர் சத்வாலிடம் அமைச்சர் ஹமீட் கூறினர்——

# தமிழக மீனவர்களை கடற்படை சுடவில்லை!

## கூட்டுரோந்துக்கும் கோரிக்கை

(கொழும்பு)

புதுடில்லியிலிருந்து கிடைத்த அவசர அழைப்பின் பேரில் நேற்றுமாலை புதுடில்லி பயணமான இந்தியத் தூதுவர் திரு. ஜே. எஸ் சத்வால் நேற்றுக் காலை வெளிநாட்டமைச்சுக்கு அழைக்கப்பட்டார். அங்கு அவரைச் சந்தித்த வெளிநாட்டமைச்சர் ஜனுப் ஏ. ஸி. எஸ். ஹமீட் பாக்கு நீரிணைப் பிரதேசத்தில் இலங்கை இந்திய கூட்டுரோந்து நடவடிக்கையில் இலங்கை இந்தியக் கடற்படையினர் ஈடுபடவேண்டுமென்று யோசனை தெரிவித்தார்!

இந்த யோசனை குறித்து இந்திய அரசிடம் கூறுவதாக திரு. சத்வால் தெரிவித்தார்.

இம்மாதம் 13-ம் திகதி இந்தியக் கடல் எல்லையில் வைத்து இரு இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுட்டுக் கொலை செய்தது தொடர்பாகவே இச்சந்திப்பு இடம் பெற்றது.

(6ம்- பக்கம் 3-ம் கலம்பார்க்க)

## கீஸிங்கர் அக்கறை!

(வாஷிங்டன்)

இலங்கை இனப்பிரச்னையைத் தீர்த்து வைக்கும் முயற்சியில் முன்னாள் அமெரிக்க ராஜாங்க செயலர் டாக்டர் ஹென்றி கீஸிங்கர் ஈடுபடவுள்ளதாக நம்பகமாகத் தெரியவந்துள்ளது

இந்தப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினருக்குமிடையே மத்தியஸ்தராகவிருந்து திரு, கீஸிங்கர் செயற்படவுள்ளதாக தெரிகிறது.

## எதிர்க் கட்சிகளின் கூட்டத்துக்கு தடை

(கொழும்பு)

மூன்று பிரதான எதிர்க்கட்சிகள் கொழும்பில் நடத்தவிருந்த கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அரசின் சில நடவடிக்கைகளை கண்டித்து சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் கட்சி என்பன இணைந்து இம்மாதம் 20-ந்திகதி கொழும்பில் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தஏற்பாடுசெய்திருந்தன.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இக் கூட்டத்திற்கு அனுமதி வழங்க பொலிசார் மறுத்விட்டனராம்.

# “இந்தியாவின் நிதானத்தை இலங்கை மதிக்கவில்லை”-

## — எம். ஜி. ஆர்.

[சென்னை]

இந்தியக் கடல் பிரதேசத்தில் அமைதியாக மீன்பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுட்டுக்கொன்றமையை தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் தமிழக மக்கள் சார்பாகவும், தமிழ்நாடு அரசு சார்பாகவும் வன்மையாகக் கண்டனம் செய்துள்ளார்!

இலங்கைத் தமிழர் பிரச்னை

(5-ம் பக்கம் 3-ம் கலம் பார்க்க]

## கருணாநிதி கண்டனம்——

# இலங்கைத்தமிழர் துன்பங்கள் இந்தியாவுக்கு அறைகூவல்’

[சென்னை]

“இலங்கைத் தமிழர்களுக்கும், இந்திய மீனவர்களுக்கும் இலங்கை ராணுவததால் இழைக்கப்படும் கொடுமைகள் அதிகரிபபதற்கு இந்திய மத்திய அரசின் போக்கே காரணமாகும்.”

இவ்வாறு தி. மு. க.வின் நேற்றைய நிர்வாகசபைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது

“இந்தியக் கடலோரரோந்துப்படையினரால்கைப்பற்றப் பட்ட இலங்கைக் கடற்படைக் கப்பலை இலங்கை அரசிடம்

(5ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

## 434 பேர்

[சென்னை]

இலங்கையிலிருந்து நேற்றும் 92 குடும்பங்களைச் சேர்ந்த 434 அகதிகள் படகுகள் மூலம இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளார்கள்.

## நெடுமாறனின் யோசனை!

[சென்னை)

‘இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதில் இலங்கை அரசுக்கு அக்கறையில்லாததால், இலங்கைத் தமிழர் படுகொலை செய்யப் படுவதைத்தடுத்து நிறுத்த இந்தியா இராணுவத்தை இலங்கைக்கு அனுப்ப வேண்டும்’

இவ்வாறு இந்திய பிரதமரைக்கோரும் தீர்மானமொன்று நேற்றுச் சென்னையில் கூடிய காந்தி காமராஜ்

(5ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

# சுந்தரின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமம்!

## ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கில்மக்கள்

(வவனியா)

மறைந்த தமிழ்ப் பெரியார் திரு. சி. சுந்தரலிங்கத்தின் பூதவுடல் நேற்றுக்காலை சகல மரியாதைகளுடன் தமிழர் கலாசார முறைப்படி வவனியா நாவற்குளம் திருலிங்கபுரம் தோட்டத்தில் தகனம் செய்யப்பட்டது.

(5ம்பக்கம் 3ம் கலம் பார்க்க]

## கல்யாணசுந்தரம் தந்தி

(சென்னை)

இலங்கைக் கடற் படையினரின் ஊருடுவலைத் தடுத்து, பாக்குநீரிணையைப் பாதுகாக்குமாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம், பிரதமர் திரு. ரஜீவ் காந்திக்கு அனுப்பியுள்ளதந்தியில் கேட்டுள்ளார்.

உ
சிவமயம்

மங்களகரமான
திறப்பு விழா
கோல்டன் செறிமிக்ஸ்,
2D, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

காலம்:
18-02-1985 காலை 7-15
சுபவேளையில் திறந்துவைக்கப்படும்

அனைவரும்
அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

- கொமாட் செட்
- ஸ்கொட்டின் பான்
- வாஷ் பேசன்
- சிங் வகைகள்
- குளியலறை சாதனங்கள்
- மாபிள்கள்
- எஸ்லோன் பைப்புகள்

மொத்த. சில்லறை வியாபாரிகள்
GOLDEN CERAMIC
2D, STANLEY ROAD, JAFFNA [1881]

# விளம்பரம்

## விற்பனைக்கு

யூரியா உரம் விற்பனைக் குண்டு. M. G. M. For age Stores, No 208, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 22611
1839

சீமாட்டி பாம்ஸ் உற்பத்திப் பொருட்கள் முட்டை, புறெயிலர்இ... றச்சிக்கோழிமொத்த சில்லறை விற்பனவுக்கு உண்டு. சீமாட்டி ரெக்ரைல்ஸ் 158, நவீனசந்தை, யாழ்ப்பாணம். ரெலிபோன்: 24096.
(1843)

மானிப்பாயில் புளியடி மார்க்கெட் லேனில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; இ. தருமராஜா, புளியடி மார்க்கெட்லேன், மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்
1876

காங்கேசன்துறை வீதி நாச்சிமார் கோவிலடியில், காந்தி கராச்காணி 1பரப்பும், வண். வடமேற்கு கேசாவில் வீதியில் 1½ பரப்புக்காணி சகல வசதி கொண்ட வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. விஷ்ணுகாந்தி, 591, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
1868

தெல்லிப்பழை - தையிட்டி வீதியில், தையிட்டிப் பிள்ளையார் கோவிலுக்கு கிழக்கால் உள்ள சுமார் ஒன்பது பரப்பு தோட்டக்காணி விற்பனைக் குண்டு. [வீடும் கட்டுவதற்கும் ஏற்ற பாதுகாப்பான இடம்] விபரங்களுக்கு:- நா சபாபதிநாதன், நில அளவையாளர் சித்தன்கேணி.
1891

கிளிநொச்சி கரடிப் போக்கில் ரேட்டிற்கருகாமையில் பாரசக்தித் தியேட்டருக்கு அருகாமையில் 4ம் வாய்க்காலுடன் 5 ஏக்கர் காணி மில்போடக்கூடிய சகல வசதிகளுடனும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி வேலாயுதன், பால் பதனிடும் தொழிற்சாலை, கிளிநொச்சி.
1872

மூன்று வர்ண லைட்டும், டைமரும் கொண்டபுதியநாஷனல் பெடஸ்ரல் மின்விசிறி [Fan] விற்பனைக்குண்டு. விலை ரூபா 2750-/ மட்டுமே. ட்ரேட் சென்ரர் Home Finance LTD 155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
1842

தனிப்பாவிப்பிலுள்ள 8 Sri தொடர் இலக்கமுள்ள C 90 [சிவப்பு/வெள்ளை] மலிவு விற்பனைக்குண்டு F. ஜோஜ், 11,A வளன்புரம், கொழும்புத்துறை. யாழ்ப்பாணம்.
1888

## விற்பனைக்கு

புன்னாலைகட்டுவன் வடக்கில், சந்திக்கு அருகில் நான்கு பரப்புக்குக் காணி விற்பனைக்கு உண்டு. T ஸ்ரீஸ்கந்தராஜா, கேணியடி, குப்பிழான், ஏழாலை.
1893

O/L விசேட பரீட்சைக்கு முன்னர் துரித மீட்டல் செய்ய 4வருடகடந்தகால வினாக்களும் விடைகளும் 10 பாடங்களில் கிடைக்கும். ஒவ்வொன்றும் ரூபா 12/50. பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலைகள்.
1889

## தேவை

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையிலுள்ள எவர்சில்வர் இன்டஸ்ரீஸ் நிறுவனத்திற்கு கீழ்க்காணும் தொழில்களுக்கு அனுபவமுள்ளவர்கள் தேவை யான சான்றிதழ்களுடன் நேரில் வரவும். (1) கன்னர வேலை (Tinkers), (2) பொருத்துனர் (Fitter), Ever Silver Industries (Pte) Ltd, Industrial Estate, Atchuvely.
1864

கிளிநொச்சி பால் சபையின் பால் பதனிடும் தொழிற்சாலைக்கு கல்வித் தகைமையும், அனுபவமுள்ள ஓர் BOOK-KEEPER கணக்குப் பதிவேட்டாளரும், நல்ல அனுபவமுள்ள 40 வயதிற்கு மேற்பட்ட லொறிச் சாரதியும் தேவை. விண்ணப்பதாரர்கள் தகைமைச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுடன் எதிர்வரும் 27ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம்தரவும். அன்றைய தினம் மேற்படி பதவிகளுக்கான தத்தமது விண்ணப்பங்களைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் சமர்ப்பித்தல் அவசியம். முகாமையாளர், பால் பதனிடும் தொழிற்சாலை, கிளிநொச்சி.
1871

பாண், கேக், சுவீற் தயாரிப்பதில் திறமையான அனுபவம் உள்ள ஒருவர் உடன் உடன் தேவை. நேரில் வரவும் சுவீமா பேக்கவுஸ், மானிப்பாய்.
1886

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் பழைய பூங்காவீதியில் இரட்ணசபாபதி சிறீதரன் என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். இ. சிறீதரன் 52/1 ஈச்ச மோட்டைவீதி யாழ்ப்பாணம்.
1890

மில் லேன், மல்லாகம் விலாசத்தை உடைய சிவசுப்பிரமணியம் ஜெயசாந்தினியின் அடையாள அட்டை தவறிவிட்டது, கண்டெடுத்தவர்கள் 601/3, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும்.
1880

## மீண்டும் கடத்தினர்

[யாழ்ப்பாணம்]

சுன்னாகத்திலுள்ள மின்சார சபை பிரதேசக் காரியாலயத்துக்குச் சொந்தமான ஜீப் ஒன்று நேற்று சில இளைஞர்களால் எடுத்துச் செல்லப்பட்டது.

ஏற்கனவே சில இளைஞர்களினால் கொண்டுபோகப்பட்டு திருப்பிக் கொடுக்கப்பட்டிருந்த இந்த ஜீப் மீண்டும் நேற்றுப் பகல் 1 மணியளவில் இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டது.

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

[இல:84 அ-பிரிவுகள் 524,532]

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற வேதவனம் கனகசபை இராஜசுந்தரம், சங்கானை என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.

—மரணமெய்தியவர் இராஜசுந்தரம் கைம்பெண் சிவஞானரத்தினம், ''செறிடேல்'' சங்கானை.

—மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம்

இல: 3851

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985 - ஆம் ஆண்டு மாசி மாதம் 22-ஆம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றுர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைவு
இ. சிவசுப்பிரமணியம்
மனு சட்டத்தரணி.

1985-ஆம் ஆண்டு தை மாதம் 28 ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
1651

## இலவசம்! இலவசம்! இலவசம்!

எமது இரண்டாவது ஆண்டு நிறைவையிட்டு மார்ச் 3ம் திகதி எமது அங்கத்தவர்களுக்கு இலவசமாக VIDEO CASSETTE வழங்கப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் ஆதரவே எங்கள் வளர்ச்சி,

**நல்லூர் வீடியோசென்ரர்**
(முற்றிலும் குளிரூட்டப்பட்டது)
19, முருகேசர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
1832

## VACANCY

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

LECTURER : Electrical Engineering
Candidate with Electrical Engineering degree can apply.

SALARY: Rs. 1,900/- to Rs. 2,600/- per month

INSTRUCTOR: Engineering Drawing
Electronics

Candidates with degree or diploma qualifications in the above fields can apply.

SALARY : Rs. 1,200/- to Rs. 1,800/- per month

Apply with full bio-data to Director,
Jaffna College Technical Institute, vaddukoddai.
Closing date—26th February, 1985.

1838 DIRECTOR

## 31வது நாள் நினைவஞ்சலி

அமரர் தி. திருச்செல்வம் (பொன்ராசா)
(இளைப்பாறிய புகையிரதப்பகுதி உத்தியோகத்தர்)

மலர்வு:- 17- 11- 1935 உதிர்வு:- 20- 1- 1985.



எங்களை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென மீளாத்துயில் கொண்ட உங்களை மறக்க முடியாது கலங்கி நின்று உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மறைவுகேட்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும், நேரில்வந்து ஆறுதல் அளித்தோருக்கும் நன்றி.

19- 2- 1985 செய்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

அன்னாரின் மனைவி, மக்கள், சகோதரர்கள், மாமி, மைத்துனர்கள், உறவினர்கள்.


திருநெல்வேலி கிழக்கு.
கேணியடி,
1865

## 31ம் நாள் நினைவஞ்சலி

சிவக்கருலூலர், ரேட்ரியன் (P H. F)

**திரு. இ. அரசரத்தினம்**
(ஸ்தாபகர் அரஸ்கோ தொழிலகங்கள்)

மலர்வு:- 23-09-1918 மறைவு:- 20-01 1985



குடும்ப ஒளிவிளக்காய், அன்பின் திருவுவாய், பண்பின் சிகரமாய், அறிவின்சுடராய், பாசத்தின் பிறப்பிடமாய், வாழ்வின் வழிகாட்டியாய் சமூகத்தின்மத்தியில் நன்மதிப்புப்பெற்ற எம் குலவிளக்கே எம்மையெல்லாம் தாங்க முடியாத ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு மின்னலென மீளாத்துயில் கொண்ட எங்கள் தெய்வமே! உங்கள் ஆத்ம சாந்திக்காக நாளும், பொழுதும் நீங்கள் வழிபட்டு வந்த நல்லூர்க் கந்தனை பிரார்த்திக்கிறோம்.

வீட்டுக்கிருத்தியம் 19-2-85ல் எமது இல்லத்தில் காலை 10 மணியளவில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்,

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
''கந்தன் அருள்'' 54, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
1892

1 ஸ்பெயின் பிரான்ஸ் செல்வதற்கான சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

2 குறைந்தசெலவில் கூடிய விரைவில் BERLIN செல்வதற்கான ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.

**AIR-TRANSIT**

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

### மணிவாக்கு

வரலாற்றைப் படியாதவர் பழைய தவறுகளைத் திரும்பவும் புரிவர். அதனைப் படித்தவர் வேறு வழிகளில் தவருக நடக்க வழிகாண்பர்.

— ஓர் அறிஞர்.

## நமது நோக்கு

# பத்திரிகைகளின் பந்தாட்டம்

இங்கிலாந்தின் தலைமை அமைச்சராய் நான்குமுறை அரசு செலுத்திய அரசியல் மேதை, கிளாட்ஸ்டன் ஒரு பெரிய எழுத்தாளர். பத்திரிகைகளுக்கு ஓயாமல் கட்டுரை எழுதி அனுப்புவார். அவருடைய எழுத்துக்கு நிறையப் பணம் கொடுத்தார்கள் பத்திரிகை உடமைக்காரர்கள். பொய்யும் புளுகு மற்ற கட்டுரைகள் அவை.

மக்கள் நலனுக்கு உகந்தவற்றைத்தான் அவர் எழுதுவார். மாருக எழுத அவருடைய பேனு மறுத்துவிடும் காகிதமும் பேனுவும் ஒன்றை ஒன்று தீண்டா.

செல்வமும் செல்வாக்கும் படைத்த ஒரு பெரும் பத்திரிகை உடைமைக்காரர், தமது பத்திரிகைக்கு எழுதும்படி கிளாட்ஸ்டனுக்கு எழுதிப் பார்த்தார் அசையவில்லை. பணத்தினுல் அவர் மயங்கவில்லை. தொகை போடாத செக் ஒன்றைக் கிளாட்ஸ்டனுக்கு அனுப்பிவைத்தார். பத்திரிகையாளராகிய நாம் ஒவ்வொருவரும் இச்சந்தர்ப்பம்கிடைத்தால் என்னசெய்திடுவோமென்று வாயூறுவது இயற்கை. ஆனல் அனுப்பியபடியே அந்தச் செக் திரும்பிவந்தது உடைமைக்காரர் கைகளுக்கு

இத்தகைய மனிதர் உறுதி குலேயாத எழுத்தாளர், நான்கு முறை இங்கிலாந்தின் பிரதமராக இருந்தார் என்பதில் என்ன ஆச்சரியம்?

அரசியலில் சிந்தனே, சொல், செயல் ஒன்ருக இருக்க வேண்டியதில்லே என்றுநாம்நம்ப பழகிவிட்டோம். அதனுல் தான் கிளாட்ஸ்டன் போன்ற சத்திய வீரரின் ஆட்சியை எமது நாடு கனவிலும்காண முடியாது தவிக்கின்றது.

உள்ளத்தில் தோன்றுவது - உண்மை, உண்மை தானே! அதையே வாயினுல் சொல்லவேண்டும்- வாய்மை, வாய்மை என்ருலும் உண்மைதான்! அதையே மெய்யால் செய்யவேண்டும் - மெய்ம்மை; மெய்ம்மை என்ருலும் உண்மைதானே. இம்மூன்றும் ஒரே பொருள் உள்ளவை.

ஷேக்ஷ்பியரின் ஹாம்லெட் நாடகத்தில், கதாநாயகர் ஹாம்லெட் ஒரு நாடகம் நடிககப் பாத்திரங்களுக்குப் பயிற்சியளிக்கும்போது சொல் செயலுக்குப் பொருந்தும் முறையில் எவ்வாறு பேச, நடிக்கவேண்டுமென்று கற்றுக்கொடுக்கிருர்.

நாடகத்தில் நடிப்பவர்கள், சொல் ஒன்று செயல் ஒன்ருக நடிப்பவராஞல் மக்கள் உள்ளத்தைக் கவர முடியாது.

மக்கள் உள்ளத்தைக் கொள்ளே கொண்ட நடிகர்கள் இன்று நாட்டின் தலேவர்களாகவிருப்பது சத்தியத்தின் பலத்தை உணர்த்து றது. கிரகங்களுடன் போராட்டம்" (star war) என்பது ஒரு ஹொலி வூட் படம். அந்தப் படத்தில் கற்பனேயாக அமைந்த யுத்தக்காட்சிகளே நிதர்சனமாகக் காட்ட ஜனுதிபதி றீகன் முனேகிருர். உலக பாதுகாப்புக்கு இதுவும் ஒரு வழியென்பது றீகனுக்கு நடிப்பில் பிறந்த உண்மையாகும்.

எங்கள் நாட்டின் ஆட்சிக்கு உதவும் நடிப்புத் திறமையோ, பத்திரிகைப் பலமோ சத்தியத்தில் உறுதிகொண்டிருந்தால் இன்றுநாடு இவ்வளவுதூரம் பள்ளத்தை நாடியிருக்காது.

வீழ்ச்சியை வளர்ச்சியென்றும் நாட்டின் ஒரு பொறுப்பான மக்கள் கூட்டம் வர்ணிக்கமுடியாத கொடுமைக்குள்ளாவதை பயங்கரவாதம் என்றும், அது ஒழிந்தால் எல்லாம் நன்ருகும் என்றும் எழுதும் பத்திரிகைகள் தாமுங்கெட்டு, ஆட்சியையும் மக்களேயும் கெடுக்கும் கொடுமைச் சாதனங்கள்.

எட்டு வருடங்களாகத் தொடரும் இன்றைய ஆட்சி, நாட்டில் ஐக்கியத்தையோ தேசியத்தையோ உருவாக்க முயலவில்லே. இன்று மக்கள் உள்ளக் கிடக்கையை அறிய பத்திரிகைச் சேவை உதவவில்லே. வடக்கில் தமிழர் உரிமைப்போராட்டம், தெற்கில் ''அது தேசியப் போராட்டம்'' நாடனேத்திலும் வாழ்க்கைப் போராட்டம் இவற்றை வைத்துப் பத்திரிகைகள் பந்தாட்டம்.

நெல் ஏற்றுமதிக்குத் திட்டமிடும் அரசு, இன்று அரிசியின் விலே தெரிந்தால், மக்கள் திண்டாட்டத்தை உணர்ந்தால், அவர்கள் மனத்தை போரில் திசை திருப்புவது தர்மமல்ல வென்பதை உணரும். இதனே உணர்த்த வல்ல அரசின் நெற்றிக்கண்ணுக்கு அஞ்சாதபத்திரிகைச்சேவை பலம்பெறவேண்டும்.

# நாடு ஆபத்தை நோக்கி செல்கிறது

(டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வா இலங்கை இனப்பிரச்னே தொடர்பாக 'கிறிஸ்ரியன் வேக்கர்ஸ்' என்ற சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரையின் சில பகுதிகள்)

சுதந்திர ஸ்ரீலங்கா அதன் 37-வது சுதந்திர ஆண்டு நிறைவில்மிகவும் நெருக்கடியான காலகட்டத்தைக் கடந்து செல்கிறது.

இத்தருணத்தில் ஸ்ரீலங்கா தேசம் என்று ஒன்றுள்ளதா? என்ற கேள்வியே சோதனே மிகுந்ததாக இருக்கிறது.

பிரச்னேக்குள்ளாகியுள்ள இலங்கைத்தேசம், உண்மையில் பல்லின, பலமொழி, பலமதங்களேக் கொண்ட ஒரு நாடாகும் இலங்கைத் தேசம் என்ற ஒன்று இருக்கிறதா? என்ற கேள்வியிலிருந்து வேறுபடுவதாக அப்படி ஒரு ஒற்றையாட்சி அமைப்புள்ள தேசம் இருக்கவேண்டுமாஞல் இலங்கையின் பல்லின, பலமொழி, பலமத சமுதாயங்கள் வரலாற்றுச் சான்றுகள் தரும் முடிவுகளின் அடிப்படையிலேயே ஆட்சி செய்யப்படவேண்டும்.

விரிவடைந்து செல்லும் இலங்கை பிரச்னேகளின் மத்தியில், ஒருமைப்பாட்டைக் கடைப்பிடிக்கக் கூடிய வழிவகைகள் தெளிவாக தெரிந்திருந்தும் அவ்வழிவகைகள் இதுவரை கடைப்பிடிக்கப்படவில்லேயென்பதே கவலேக்குரியதாகவிருக்கின்றது.

நாட்டைமீளக்கட்டியெழுப்புவதுடன், நாட்டு மக்கள் கூட்டாக நிர்வாகங்களில் பங்கெடுக்கும் வகையில் மாவட்ட, பிரதேசரீதியாக அதிகாரப் பரவலாக்கத்தை மேற் கொள்வதேஅந்தவழிவகையாகும்.

இந்நிலேயில் ஜனுதிபதி அவர்கள் கடந்த டிசம்பர் மாதம் 21ந் திகதி சர்வகட்சி மகாநாட்டைக் கலேக்குமுன்னர் அரசுதரப்பில் சமர்ப்பித்த பிரேரணேகளேயும் பரிசீலிக்க வேண்டும்.

அப்பிரேரணேகள் மத்திய அரசிலிருந்து பிரதேசசபாக்கள், மாவட்ட சபைகள், மாகாணசபைகள் என்பவற்றுக்கு அதிகாரங்கள் சிலவற்றைப்பகிர்ந்தளிப்பதாக இருந்தது.

சர்வகட்சி மகாநாடு தயங்கிய நிலேயில் நின்றபோதும், ஒத்திப்போடப்பட்டபோதும், ஜனுதிபதி மேற்கண்ட பிரேரணேகளேயே அரசு தரப்பில்முன்வைக்க எப்பவோ தயாராகியிருந்தார்.

இறுதியாக அவற்றைச்சமர்ப்பித்தார். ஆனல் ஏதோ கொதிக்கும் உருளேக்கிழங்கை கையில் எடுத்து நிலத்தில் போட்டவர் போல அப்பிரேரணேகளே எதுவும் செய்யாது தவிர்த்துவிட்டார்.

இதில்வேதனேக்குரிய தென்னவெனில் சர்வகட்சி மகாநாட்டையே ஜனுதிபதி இலங்கைத்தமிழ் மக்களின் பிரச்னேக்கான இறுதித் தீர்வாகக் கருதியிருந்தது.

(தொடரும்)

# வண். 19ம் வட்டார வீதிகளில் இனிமேல் குப்பை வீதிக்கு வராது!

[யாழ்ப்பாணம்]

வண் மேற்கு 19ம் வட்டார மக்கள் நலன்புரிச் சங்க உறுப்பினர்களும் தொண்டர்களுமாகச் சேர்ந்து இம்மாதம் 5ம், 10ம் திகதிகளில் சிரமதான மூலம் வீதிகளிலிருந்த குப்பை கூளங்களே அகற்றி வீதி ஓரங்களில் திட்டுக்களாகப் படிந்திருந்த மண் குவியல்களே அகற்றி, வடிகால்களேச் சுத்தம் செய்து, தமது சுற்ருடலில் அமைந்திருக்கும் வீதிகள் அனேத்தையும் திருத்தியுள்ளனர்.

இச்சிரமதானப் பணியின் போது தமிழ், முஸ்லிம் மக்கள் அனேவரும் சேர்ந்து பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது இப்பணியில் பல்கலேக்கழக விரிவுரையாளர்கள் முதல் தொழில் அதிபர், சட்டத்தரணிகள், பல்வேறு அரசு திணேக்களங்களேச் சேர்ந்த ஊழியர்கள், இளேப்பாறிய அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், இளேஞர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். சிரமதானத்தின்போது அப்பகுதி வக்கள் தேநீர், காலே உணவு முதலியன வழங்கி உற்சாகப்படுத்தினர்.

இம்மாதம் 3ம் திகதி 19ம் வட்டார மக்களின் சுகாதார வசதிகளுக்காகவும், பிறநலன்களுக்காகவும் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி நலன்புரிச் சங்கத்தினரின் வேண்டுகோளின் பேரில் அப்பகுதி மக்கள் இனிமேல் வீதிகளில் குப்பைகளேக் கொட்டுவதை நிறுத்தியுள்ளனர். வீடுகளில் சேமிக்கும் குப்பைகளே மாநகரசபை சுகாதாரப் பகுதியினர்மூலம் அகற்றுவிக்க ஏற்ற ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளது.

## மக்கள் கருத்து

### அடையாள அட்டை பெறுவதில் கஷ்டம்

யாழ். மாவட்டத்தில் வதியும் அனேத்து மக்களும் இன்று தங்கள்வசம் வைத்திருக்க வேண்டிய பொருள் ''தேசிய அடையாள அட்டை''யாகும்.

கடுகதியில் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து அமைவேகத்திலும் அதனேப் பெற்றுக் கொள்ள முடியாத அப்பாவிகளில் நானும் ஒருவன்.

கடந்த ஜூலே 84 இல் நான் தேசிய அடையாள அட்டைக்கு தேவையான தஸ்தாவேஜுகளுடனும், எமது பகுதி கிராமசேவகர் ஊடாக விண்ணப்பித்தேன். 'இன்றுவரும் நாளேவரும்' என்றுஎதிர்பார்த்தேன் வரவில்லே கிராம சேவகரால் வழங்கப்பட்ட துண்டுடன் கச்சேரிக்கும், உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்கும் மாறி மாறி அலேந்தேன்.

இறுதியில் கடந்த ஜனவரியில் யாழ்.கச்சேரியில் இருந்து ஒரு கடிதம் கிடைத்தது. நீர் இலங்கைப் பிரஜையா? என்பதை நேரில்வந்து உறுதிப்படுத்தவும் என கேட்கப்பட்டிருந்தேன் அதன் பிரகாரம் கச்சேரிக்குச் சென்று ''நான் இலங்கைப் பிரஜை'' தான் என்பதைக் கூறியபொழுது சம்பந்தப்பட்டஅதிகாரி எமது பகுதி உதவி அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட்டதாகவும், அவரிடம்சென்று இந்த விடயத்தைப்பற்றி விளக்கமளிக்குமாறும் கூறினுர்.

நான் இலங்கைப் பிரஜை இல்லாவிட்டால் கிராம சேவகர் எனது விண்ணப்பத்தை ஏற்றிருக்கமாட்டாரே!

இலங்கைப் பிரஜையாக இருந்தும் இந்திய வம்சாவழித் தமிழன்என்று சந்தேகங் கொண்டு பார்க்கும்நிலே இங்கும் நிலவுவது கவலேயளிப்பதாகும். எனது அடையாள அட்டை விரைவில்கிடைக்க வழிசெய்வார்களா?

ச. அண்ணுச்சாமி

கைதடி மேற்கு.

### வண்ணுர்பண்ணே

# தபால் கந்தோரை மூட வேண்டாமென மகஜர்

[யாழ்ப்பாணம்]

கடந்த சுமார் 70 ஆண்டுகளாக வண்ணுர்பண்ணே பகுதி மக்களுக்கு பெரும் சேவையாற்றிவந்துள்ள வண்ணுர்பண்ணே தபால் கந்தோரை நிரந்தரமாக மூடப்பட வேண்டாம் எனக் கோரி அப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மகஜர் ஒன்றை தபால் அமைச்சுக்கு அனுப்பவுள்ளனர்.

வண்ணுர்பண்ணேப் பகுதி மக்கள் ஏராளமானவர்களின் கையெழுத்துடன் இம் மகஜர் அனுப்பப்படவிருக்கின்றது.

இத் தபால்கந்தோர் நேரில் அண்மையில் இடம்பெற்ற கொள்ளேச்சம்பவத்தையடுத்து அக்கந்தோரில் பணிகள் எதுவும் நடைபெருமல் இருந்து வருகின்றது இதனே நிரந்தரமாகவே மூடிவிடுவதற்கு அமைச்சு ஆலோசித்து வருவதாகக்கருதப்படுவதையடுத்தே பொதுமக்கள் இம் மகஜரை அமைச்சருக்கு அனுப்பவிருக்கின்றனர்.

# தமிழ்நாடு சட்டசபை 25-ல் கூடும்

[சென்னே]

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களேக் கொண்ட தமிழ்நாடு சட்டப் பேரவை இம்மாதம் 25ம் திகதி கூடவுள்ளது அன்றைய தினப் புதிய உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வார்கள்.

27ம் திகதி புதிய சபாநாயகர், துணே சபாநாயகர் தெரிவு நடைபெறும்.

## வாழிய வாழியவே!

சீரிய கொள்கை பாரிய திட்டம்
சிறந்த நல்லொழுக்கச் சுற்றம் — கூடிய
கொக்குவில் மேஜர் அம்புலன்ஸ் பிரிவே
வாழிய! வாழிய!! வாழியவே!!!

கூரிய வீச்சு நேரிய செயல்திறம்
குறும்பிழை பொறுக்கா நிர்வாகம் கொண்ட
கொக்குவில் மேஜர் அம்புலன்ஸ் பிரிவே
வாழிய! வாழிய!! வாழியவே!!!

உதவிசெய்யும் நோக்கத்துடன் ஒன்றுபட்டேதான்
முதலுதவி எனும் பெயரில் முன்னே வருவோம் காண்
அன்புடனே எம்மைநோக்கும் அன்புநெஞ்சமே
ஆசீர்வாதம் ஒன்றைத்தானே உன்னேக்
கேட்கின்ருேம்.

— கோ. சுப்பிரமணியம்.

○ கொக்குவில் மேஜர் அம்புலன்ஸ் பிரிவின் ஆண்டு நிறைவை முன்னிட்டு இக்கவிதை பிரசுரமாகிறது.

## ★ லெபனுன் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு?

# லெபனுனிலிருந்து இஸ்ரேலின் முதல் கட்ட படைகள் வெளியேறின!

## மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்!

பெய்ரூட், பெப். 17

**தெற்கு லெபனுனிலிருந்து இஸ்ரேலின் முதற்கட்டப் படை விலக்கல் நடவடிக்கை நேற்றுடன் முற்றாக முடிவடைந்தது.**

இஸ்ரேலின் இந்த முதற் கட்டப் படை விலக்கல் நடவடிக்கை குறிப்பிட்ட காலத்திற்கு இரு நாட்கள் முன்னதாகவே முடிவடைந்துவிட்டது. பெய்ரூட்டுக்கு தெற்கே 25 மைல் தொலைவிலுள்ள அவாலி பாலத்திலிருந்து இஸ்ரேலியப் படைகள் நேற்று முழுமையாக வெளியேறின.

இஸ்ரேலியப் படைகள் வெளியேறிய உடனேயே அந்தப் பாதுகாப்பு நிலைகளில் லெபனுன் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். முக்கியமாக இஸ்ரேலியப் படைகள் விலகிச்சென்ற துறைமுக நகரமான சைடூன் நகரை லெபனுன் இராணுவத்தினர் சென்றடைந்தபோது அங்குள்ள மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் அவர்களை வரவேற்றனர். இராணுவத்தினர் இந்நகரைத் தற்போது முழுக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்துள்ளனர்.

இஸ்ரேலியப் படைகள் கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசம் ஒன்றிலிருந்து முன் நிபந்தனையின்றி வெளியேறியிருப்பது இதுவே முதற் தடவையாகும். ஆனாலும் தாம் விலகிய பிரதேசங்களிலிருந்து கெரில்லாத் தாக்குதல்கள் நிகழுமாயின் அப்பிரதேசங்களைத் தாம் மீண்டும் ஆக்கிரமிக்கும் உரிமையுண்டு என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இஸ்ரேலியப் படைகள்மீது கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட கடும் தாக்குதல்களினுலும் நெருக்கடியினுலுமே இஸ்ரேலியப் படைகள் அங்கிருந்து வெளியேறியுள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இஸ்ரேலின் இந்த படை விலக்கல் நடவடிக்கையினுல் லெபனுன் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காணப்படும் சாத்தியக் கூறுகள் ஏற்பட்டுள்ளன. (சூ)

---

### தமிழர் மீது

## மனிதாபிமானமற்ற நடவடிக்கை

## இனப்பிரச்னையைத் தீர்க்காது

[யாழ்ப்பாணம்]

''மனிதாபிமான மற்ற முறையிலான நடவடிக்கைகளால் தமிழர்கள் கொலை செய்யப்படுவதாலோ பலபடு பாதகங்களுக்கு உட்படுத்தப்படுவதாலோ அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்காமல் விடுவதாலோ இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண முடியாது. இதனை அரசு உணர்ந்து செயல்பட வேண்டும்.

நேற்று முன்தினம் கூடிய தமிழ் தொழிற்சங்க கூட்டணியின் பொதுச் சபைக் கூட்டத்தில் இந்த வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள இ. த. ஆ. சங்கப்பணி மனையில் மேற்படி தொழிற்சங்கத்தின் தலைவரும் முன்னுள் கோப்பாய் தொகுதி எம் பி. யுமான திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் தலைமையில் கடந்த சனிக்கிழமை இக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பமானதும் அமரர் சுந்தரலிங்கத்துக்கு அனுதாபம் இரு நிமிடமௌனஞ்சலி செலுத்தப்பட்டது.. [மா]

---

### நஷ்டஈடு

[சென்னை]

சிதம்பரம் பயணிகள் கப்பலில் ஏற்பட்ட தீவிபத்தில் பலியான ஒவ்வொருவரின் குடும்பங்களுக்கும் தலா 10000 ரூபாவை இந்திய கப்பல் போக்குவரத்து கழகம் வழங்கியுள்ளது. இந்திய கப்பல் கூட்டுத்தாபனம் தலா 25 ஆயிரம் வழங்கத் தீர்மானித்துள்ளது.

இதே போன்று இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 5000 ரூபாவை தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமசந்திரன் முதலமைச்சர் நிதியிலிருந்து வழங்கியுள்ளார்.

இவ் விபத்தில் சுமார் 40பேர் வரையில் இறந்திருக்கலாம் எனத் தெரிகிறது. 19 வயது நிரம்பிய இக்கப்பல் இவ்வருடம் ஜூன் மாதம் சேவையிலிருந்து நீக்கப்படுவதாக இருந்தது.

---

## 'சிதம்பரமே' விரைந்து

## சுகம் பெறுக!

இந்திய உல்லாசக் கப்பல் 'எம். டி. சிதம்பரம்' தீவிபத்துக்குள்ளாகியுள்ளது என்றசெய்தி இலங்கைத்தமிழரை, குறிப்பாக யாழ்ப்பாணத்தவரை மிகவும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

'கப்பலோட்டிய தமிழன்' உ. வெ. சிதம்பரம்பிள்ளையின் ஒரு அழியாச் சின்னமாகவே இக்கப்பலை நம்மவரில் பலர் கருதிவந்தனர். ஆனல் 83 ஜூலையில் தமற்கேற்பட்ட இன்னல்களையடுத்துத் தமது உற்ற சகோதரர்களில் ஒருவராகவே 'எம்.டி.சிதம்பரத்தை' அவர்கள் மதிக்க ஆரம்பித்தனர்.

சகலவற்றையும் இழந்து அகதிகள் என்ற நிலையில் உயிருக்குமட்டும் புகலிடம் தேடிக்கொழும்பு அகதிகள் முகாம்களில் எம்மவர்கள் நிறைந்திருந்தனர். அன்று அவர்களின் நிலை 'நடுக்கடலில்' திசை தெரியாது தத்தளிப்போரின் மனநிலையை ஒத்திருந்தது.

அந்த நிர்க்கதியான வேளையில் சௌந்தரியமான 'எம். டி. சிதம்பரம்' நம்மவர்க்கு உதவிக்கரம் நீட்டி பாதுகாப்பாக- அதேவேளை உல்லாசமாக தெற்கிலிருந்து வடக்கே அவர்களைக் கொண்டுவந்து சேர்த்தது.

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரையிலான அந்த ஒன்றரைநாள் 'சிதம்பரம் பயணத்தை' அன்று அதில் வந்தவர்கள்வாழ்க்கையிலேயே மறக்கமுடியாது.

வழிபாட்டுடன் அப்பயணம் ஆரம்பமானது. நெஞ்சம் நொந்திருந்த எம்மவர்க்கு வயிருர உணவு, களைதீரக் குளிர்பானம், கண்ணயர்ந்து உறங்க மெத்தைவிரிப்பு வசதிகளை 'எம். டி. சி' தாராளமாக வழங்கியிருந்தது.

''பாப்பா, தாயே, பெரியவரே, சகோதரம்'' என்று அதன் சிப்பந்திகள் காதுகுளிரக் கதைத்தது இன்னமும் காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

இவைமட்டுமல்ல மேல் தளத்தில் 'சில்க், சில்க், சில்க்' என்ற திரைப்படத்தையும் போட்டுக்காட்டிச் சிலமணிநேரம் மனச்சுமைகளைக்குறைத்தும விட்டிருந்தது 'எம். டி. சி'.

இவ்வாறு எமது துயரத்தில் பெரும்பங்கு வகித்த 'எம். டி சி, இன்று தீக்காயங்களுக்குள்ளாகியிருக்கின்றது. இதனை அறியும்போது எமக்கு மிகுந்த வேதனை ஏற்படுகிறது.

இத்தீவிபத்தில் இறந்தோரின் எண்ணிக்கை 40 ஆக உயர்ந்துள்ளதென்பது இறுதியாகக் கிடைத்துள்ள செய்தி ஆயினும் எம் டி சி' குடிமூழ்கிப் போகுமளவிற்கு நிலைமை மோசமில்லை என்பதை அறியும்போது சற்று ஆறுதலாக இருக்கிறது

தீயை அணைத்துக்கட்டுப்படுத்துவதில் அதன் சாதாரண சிப்பந்திமுதல் 'காப்டன்'வரை முழுமூச்சுடன் செயல்பட்டுள்ளனர்; வெற்றியும் கண்டனர்.

'எம். டி சிதம்பரத்தின்' 'தீப்புண்கள் விரைந்து ஆறி, முன்புபோலக் 'கடலரசனுக அது கடலோட வேண்டுமென்பதே புண்பட்ட ஈழத்தமிழரின் மனமுவந்த பிரார்த்தனையாகும்.

— அனந்த்

---

## 14 அமைச்சர்கள் பதவிப் பிரமாணம்

[சென்னை]

தமிழ்நாட்டின் 14 அமைச்சர்கள் சென்னை ராஜ்பவனில் நேற்று தமிழ்நாடு ஆளுநர் திரு. எஸ். எல். குரானு முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்கள்.

பதவிப்பிரமாணம் செய்வதற்கு முன்னர் இவர்கள் சென்னை கடற்கரையிலுள்ள அண்ணு சமாதிக்குச்சென்று அஞ்சலி செலுத்தினுர்கள்.

முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் உட்பட 17 பேர் தற்போது தமிழக அமைச்சரவையிலுள்ளனர்.

---

### 'அணுகுண்டு'

## பயங்கரவாதிகளால்

## வெடிக்கவைக்க முடியாது'

### அமெரிக்க பிரதி அமைச்சர் கூறுகிறுர்

வாஷிங்டன், பெப். 15

'அணுகுண்டு' இன்று உலகின் மிகப் பயங்கரமான வெடிகுண்டாக இருக்கின்றது. ஆயினும் பயங்கரவாதிகளால் இதனைக் கைப்பற்றி வெடிக்கவைக்க முடியர்து'' என்று அமெரிக்காவின் சர்வதேச பிரதிப் பாதுகாப்பமைச்சர் திரு. ரிச்சேர்ட் பேர்ன் தெரிவித்துள்ளார்.

நேற்று பத்திரிகையாளர் மகாநாடொன்றிலேயே அவர் இதனை வெளியிட்டார். திரு. பேர்ன் மேலும் கூறியதாவது: 'அணுகுண்டை'ப் பயங்கரவாதிகள் வெடிக்கவைக்கமுடியாதவகையிலேயே அமெரிக்கா அதனைப் பாதுகாத்துள்ளது.

விசேட தொழில்நுட்ப சாதனங்கள் இக் குண்டுக்குப் பொருத்தப்பட்டுள்ளன. எனவே இச் சாதனங்களை அகற்றி வெடிக்கவைப்பது பயரங்கரவாதிகளுக்கு முடியாத காரியமாகவே இருக்கும்'', என்று அவர் கூறினுர்.

பயங்கரவாதிகளிடம் அணுகுண்டு சிக்கினுல் நிலைமை எப்படி இருக்கும்? என்ற கேள்விக்கே மேற்கண்ட விளக்கம் அவரால் தரப்பட்டது. (கி)

---

## மணிலா தீவிபத்து:

## உரிமைகோரும்

## குழு

மணிலா, பெப் 15

மணிலாவிலுள்ள ஹோட்டலொன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 27 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

பலர் காணுமல்போயுள்ளனர். இந்த நாசவேலைக்கு ''தரன்ஜெல்ஸ்'' பிலிப்பைன்ஸ் ஜனுதிபதி பேர்டினன்ட் மார்கோஸின் அடக்குமுறை ஆட்சிக்கெதிராகவே இந்த நாசவேலை மேற்கொள்ளப்பட்டதாக இக்குழு தெரிவித்துள்ளது.

---

## ஆசிரியர் சம்பள

## மீளாய்வு விபரம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களின் வேதனத்தை மீளாய்வுசெய்வதற்காக கல்வி அமைச்சு தயாரட்ண சம்பள ஆய்வுக்குழுவை நியமித்திருந்தது. அக்குழுவின் விதப்புரைக்கிணங்கச் சகலதர ஆசிரியர்கள், கல்விச் சேவைக்குழு உறுப்பினர்கள் ஆகியவர்களின் வேதனம் மீளாய்வுசெய்து நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் (சிங்களம்-தமிழ்-ஆங்கிலம் விசேட பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்) ஆகியோரின் புதிய சம்பள மாற்றுத்திட்டமும், மாற்றி அமைப்பு அட்டவணையும் வருமாறு:-

| இப்போதைய சம்பளத் திட்டம் | புதிய சம்பளத்திட்டம் |
|---|---|
| ரூ. 9420—1X180—9600/10140 6X180—13020 | ரூ 11700—1X180—11880/ 12240—12X180, 4X240—15360 |
| ரூ. 11580/-முன் த. த. (தடைத்தாண்டல் முன் ரூ. 1480/-) | ரூ. 13680/-முன் த. த. (தடைத்தாண்டல் முன் 13680/-) |

| மாதாந்தப் படிகள் | வருடாந்தப் படிகள் | மாதாந்தப் படிகள் | வருடாந்தப் படிகள் |
|---|---|---|---|
| 785 | 9420X180 | 975 | 11700X180 |
| 800 | 9600 | 990 | 11880 |
| 845 | 10140X180 | 1020 | 12240X180 |
| 860 | 10320 | 1035 | 12420 |
| 875 | 10500 | 1050 | 12600 |
| 890 | 10680 | 1065 | 12780 |
| 905 | 10860 | 1080 | 1296) |
| 92 | 11040 | 1095 | 13140 |
| 935 | 11220 | 1110 | 13320 |
| 950 | 11400 | 1.25 | 13500 |
| 965 | 11580 | 1140 | 13680 |
| 980 | 11760 | 1155 | 13860 |
| 995 | 11940 | 1170 | 14040 |
| 1010 | 12120 | 1185 | 14220 |
| 1025 | 12300 | 1200 | 14400X240 |
| 1040 | 12480 | 1220 | 14640 |
| 1055 | 12660 | 1240 | 1 880 |
| 1070 | 12840 | 1260 | 15120 |
| 1085 | 13020 | 1280 | 15360 |

(மிகுதி நாளை வரும்)

# ஜனார்த்தனன் அறிக்கை

(சென்னை)

''இலங்கையிலிருந்து வரும் தமிழ் அகதிகள் மீண்டும் அவர்களுடைய நாட்டுக்குச்சென்று மானத்துடன் வாழ இந்திய மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்''

இவ்வாறு உலகத்தமிழ்இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர்இரா ஜனார்த்தனன்நேற்று சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

## இரவிலும் நடமாட்டம்

யாழ்ப்பாணம்)

நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் நேற்று யாழ்ப்பாணத்தில் இரவிலும் வீதிகளில் மக்களையும் வாகனங்களையும் காணக்கூடியதாயிருந்தது.

இடையிடையே நகரில் குண்டுச் சத்தங்களும் கேட்டன.

## 'வெல்டிங்' கருவி கொள்ளை

(நல்லூர்)

கொக்குவில் பல்தொழில் நுட்பக் கல்லூரியில் இருந்து 'வெல்டிங் கருவியையும் பயன்படுத்தப்படும் 'றெட்' கம்பிகளையும், தகரங்களையும் இனந்தெரியாதகோஷ்டியினர்கொள்ளையடித்துள்ளனர்.

கடந்த வெள்ளி இரவு வான் ஒன்றில் வந்த இனந்தெரியாத கோஷ்டியினர் மேற்படி கல்லூரியின் காவலாளியைப் பயமுறுத்திவிட்டு கொள்ளையடித்துச் சென்றனராம். (மா)

## நெடுமாறனின்...

[1ம்பக்க 3ம்கலத் தொடர்ச்சி]

தேசிய காங்கிரஸ் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திரு பா. நெடுமாறன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் இந்திய அரசினால் இலங்கைக்கு அளிக்கப்பட்ட கச்சதீவை திரும்பப் பெறவேண்டுமென்று மத்திய அரசைக் கோரும் தீர்மானமும் இக்கூட்டத்தில நிறை வேற்றப்பட்டது.


றீகல் மினி
தினசரி 10-15, 1-30
எம்.ஜி.ஆர் சரோஜா தேவி
தாய் சொல்லைத் தட்டாதே

றீகல்
தினசரி 10-30, 2 00
AN OFFICER AND A GENTLEMAN
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
36 Chamber of Sholine (KaratteFilm)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-30 P.m
GREEN ICE
(Adults)
22-2-85 தொடக்கம்
நீதிபதி


## கருணாநிதி...

(1ம் பக்க 2ம்கலத்தொடர்ச்சி)

கையளித்ததும், ஆயுதங்களுடன் வந்த விமானத்தை திருவனந்தபுரத்திலிருந்து கொழும்பு செல்ல அனுமதித்ததும், இலங்கைத் தமிழர் படுகொலை செய்யப்படுவதைத் தடுக்காமலிருப்பதும் இந்திய அரசின் செயலற்ற நடவடிக்கைகளையே காட்டுகின்றன என்று தெரிவித்த அந்தத் தீர்மானம், ''இலங்கைத் தமிழர் பிரச்னையில் மத்திய அரசு அலட்சியம்காட்டுகிறது. இலங்கையின் ராணுவ நடவடிக்கைகளால் நாட்டின் பாதுகாப்புக்குஆபத்து ஏற்பட்டுள்ளது'' என்றும் தெரிவித்தது.

### கருணாநிதி கருத்து

இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்த தி. மு. க. தலைவர் திரு மு. கருணாநிதி 'இலங்கையிலிருந்து வரும் அகதிகளின் துன்பங்கள் இந்தியாவின் சுயமரியாதைக்கு விடுக்கப்பட்ட அறைகூவல்' என்று கூறினார்.


# அந்தியேட்டி

## வேலாயுதபிள்ளை வடிவேற்கரசு

(RETD. REGIMENT SERGENT MAJOR CEYLON ARMY)


மறைவு:- 24-09-1984



அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள 19-02-85 செவ்வாய்க்கிழமை காலையில் நடைபெறும். இவரது ஆத்ம சாந்திக்காக உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள், மருமக்கள்.

வ. வேலாயுதபிள்ளை,
யாழ். சிறைச்சாலை உத்தியோகத்தர்,
யாழ்ப்பாணம். 1894

மீளாத் துயில்கொண்ட அடங்காத் தமிழன் ஸி. சுந்தரலிங்கத்தின் பூதவுடல் அருகே அவரது மனைவியார் அமர்ந்திருப்பதை படத்தில் காண்க.

# முல்லைத்தீவு மீனவருக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு!

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்கரைப் பாதுகாப்பு வலயத்தினால் பாதிப்படைந்துள்ள மீனவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க அரசாங்க அதிபர் திரு. கே ஞானச்சந்திரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட கிராம சேவகர்களை உள்ளடக்கியநேற்றைய முல்லைத்தீவு செயலக மகாநாட்டில் பாதிப்படைந்துள்ள மீனவர்களின் விபரங்களை உடனடியாகச் சேகரிக்க ஏற்பாடு செய்துள்ளதுடன், அவர்களுக்கு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நிவாரணம் வழங்கும்படியும் அவர்களைப் பணித்துள்ளார். (ரா)

## இந்தியாவின்...

1-ம்பக்கம் 3ம் கலத்தொடர்ச்சி

தொடர்பாக இந்திய அரசு காட்டிவரும் நியாயமான உணர்வுகளையும், நிதானப் போக்கையும் இலங்கை அரசு மதிப்பதாகத் தெரியவில்லையென்றும், முறைதவறி, அத்துமீறி இந்திய எல்லைக்குள் நுழைந்த இலங்கைக் கடற்படையினரை இந்திய அரசு விடுதலை செய்ததை அவர்கள் தவருகப் பயன்படுத்திக்கொண்டுதிட்டமிட்டு, மீண்டும் மீண்டும் தமிழக மீனவர்களைத்தாக்குவது கண்டிக்கத்தக்க செயலாகுமென்று முதலமைச்சர் திரு. ராமச்சந்திரன் நேற்று சென்னையில் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

''இதுதொடர்பாக இந்தியப்பிரதமர் திரு. ரஜீவ் காந்திக்கு விரிவான தந்தியொன்றையும் இவர் அனுப்பியுள்ளார்.

இது தொடர்பாக இந்தியப் பிரதமரும், தமிழ்நாடு அரசும் தக்கநடவடிக்கைகளை எடுத்து வருவதுடன், உயிரிழந்த, காயமடைந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டுவருகிறது ஆத்திரமடைந்து வன்முறைகளில் ஈடுபடவேண்டாமென்றும், பொறுமையைக் கடைப்பிடிக்குமாறும் திரு. ராமசசந்திரன் ராமேஸ்வரம் கடலோரப் பகுதி மீனவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சுந்தரின்...

(1ம் பக்க 2ம்கலத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை 9-05 மணிக்கு அவரது பூதவுடல் சொந்த இல்லத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு 10-40 மணிக்கு தகனக்கிரியை நடைபெறும் இடத்தை சென்றடைந்தது.

இந்த இறுதி ஊர்வலத்தில் வவனியா அரசாங்க அதிபர் திரு. லோகேஸ்வரன், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன், சட்டமா அதிர்ப திரு. சிவா பசுபதி உட்பட பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன சார்பாக மலர் வளையம் ஒன்றை அனுராதபுரம் இராணுவ பொறுப்பதிகாரி கேர்ணல் விஜயசிங்கா, சுந்தரலிங்கத்தின் பூதவுடல் மீது வைத்தார். அவர் ஜனதிபதியின் அனுதாபச் செய்தியையும அங்கு தெரிவித்துக் கொண்டார்.

அவரது பூதவுடலுக்கு மூத்த மகன் டாக்டர் ஞானலிங்கம் தீ மூட்டினார். வவனியாவிலுள்ள பல பாடசாலை மாணவர்களும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டனர். (சூ)

## மறக்க முடியாத ''கிருபா'' மாஸ்டர்

தோற்றத்தில், வீரத்தில், விளையாட்டில், கலையில் அவருக்குச் சென்றஇடமெல்லாம் தனியிடம் தானகவே ஒதுக்கப்படும்

மனைவிக்கும், மக்களுக்கும் ஏற்ற கம்பீர புருஷனக, மாணவ சமுதாயத்திற்கு மதிப்புமிகு ஆசானக நண்பர்களுக்கு அன்பனக வாழ்ந்து காட்டிய பெருமையை உலகறியும்.

'தன்னைப்போல் பிறரையும் நேசி''என்ற மணிமொழி அவர் உள்ளத்தில் என்றுமே நிலைத்திருந்தது. அவர் பெருமுயற்சியால் எத்தனையோ இளைஞர்கள், யுவதிகள் இன்று பல பெரும் பதவிகளை வகிக்கிருர்கள் என்பதனை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

மலையே இடிந்து விழுந்தாலும் தலையைத் துணிந்து கொடுக்கும் ''கிருபா'' எதையும் தாங்கும் இதயத்தையும் பறிகொடுத்து விட்டார்.

ஆம் தன் வாரிசுகளான இரு மகன்களையும் அடுத்தடுத்துப் பறிகொடுத்தபொழுது கிருபாவின் இதயம் எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும்.

பெண்களின் மாணிக்கம், கணவனுக்கு இசைய நர்த்தனம் புரிந்த புனிதவதி, மக்களைப் பறிகொடுத்த மகராசி, இன்று கணவனை இழந்து மஞ்சள் குங்குமம்இன்றி தனிமரமாக நின்று எல்லோருக்கும் அருந்ததி காட்டுகிருயே உன் மனம் இன்றும் சோர்வடையவில்லை ''எதையும் தாங்கும் இதயம்'' எனக்கு உண்டு என்றபதத்தைஎண்ணி சாந்தி பெறுகிருய்.

ஆனல் உன் மனக்குமுறல் எனக்கு நன்ருகத் தெரியும். ஆண்டவன்தான் உங்களுக்குத் துணை செயல் வரன் கிருபாவின் ஆத்மா சாந்தியடைவதாக. —ஈ. கே.

## இந்தியா மீண்டும்...

(1-ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் குறித்து, முன்பொருதவையும் சர்வதேசமனித உரிமைகள் ஆணைக்குழுமுன் இந்தியா எடுத்துக் கூறியிருந்தது.

சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தற்போதைய கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடைபெற்றுவருகிறது.


## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

புலோலிதெற்கு காலஞ்சென்ற கந்தப்பர் கணபதிப்பிள்ளை என்பவரது மரணசாதன சொத்து விடயத்தில்.

— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்க வழ இல: 1201

கணபதிப்பிள்ளை கைம்பெண் இலட்சுமிப்பிள்ளை புலோலி தெற்கு.

— மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1984-ம் ஆண்டு வைகாசி மாதம் 07-ம் திகதியன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது

1985-ம் ஆண்டு மாசிமாதம் 12-ம் திகதி

நீதிமன்ற ஆணைப்படி
ச. நடராசா
பதிவாளர்.

வரைவு
கே. முத்துக்குமார்
மனுதாரின் சட்டத்தரணி.
1856


## இன்றைய பலன்

மாதம்—மாசி
திகதி—7 (1985-2-18)
வாரம்—திங்கள்
திதி—சதுர்த்தசி பின் இரவு வரை
நக்ஷத்திரம்— திருவோணம் முன் இரவு வரை

மேடம்:- இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு எந்நேரமும் அவதானம வேண்டும். பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும்.

இடபம்:- நண்பர்கள் மத்தியில் நச்சரிப்புகள் ஏற்படும் எவ்விடயத்திலும் கூடிய கவனமெடுக்கவும்

மிதுனம்:- சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரும் சிந்தித்து செயலாற்றவும்.

கடகம்:- வாழ்க்கையில் வளமான திருப்பங்கள் ஏற்படும் வருவாயிலும் மந்தம் காணும் தெய்வசிந்தனை நன்று.

சிங்கம்:- உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் மாட்டிக் கொள்ள நேரும் மாணவர்கள் அமைதி வேண்டும்.

கன்னி:- பெரியோர்களுடன் பகைத்துக் கொள்ள நேரும் புண்ணிய ஸ்தல யாத்திரையென்றும் மேற்கொள்ளப்படலாம்.

துலாம்:- இருப்பிடமாற்றம் இனசனக்கொண்டாட்டத்திற்கும் இடமுண்டு தொழில்களில் தொல்லை நீங்கும்

விருச்சிகம்:- இன்று அருளும் பொருளும் இணைந்து கிடைக்கும்.

தனுசு:- உறவுகளில் பிளவுகள் தென்படும் உடல் நலம் பாதிக்கப்படலாம் உணவுவிடயத்தில் கவனம் வேண்டும்.

மகரம்:- உடல் நலம் குன்றும் உறுதியுடன் செயலாற்வும்.

கும்பம்:- எதிர்பாராத வரவுக்கு இடமுண்டு சினேகித வழியால் திருப்தி ஏற்படும்.

மீனம்:- சகோதரத்தினுல் சஞ்சலம் உண்டு எதிர்பார்த்த விடயம் இன்று அம்பலமாகும்.

திருமலை
வே. ரவீந்திரன்

# முல்லைத்தீவு முகாம்களில் 120 பேரைக் காணவில்லை!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அகதிகள்முகாம்களிலிருந்து காணமல்போன 120 பேருக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை

அகதி முகாம்களிலிருந்து பொறுப்பதிகாரிகளுக்கு அறிவிக்காது சென்றவர்கள் வேறு எங்கேனும்பாதுகாப்பாகவிருந்தால் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு அரசாங்க அதிபர் திரு கே. ஞானச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். முல்லைத்தீவிலுள்ள 18 முகாம்களில் கணக்கெடுப்பு நடத்தி முடிக்கப்பட்டு விட்டது.

காணமல் போனவர்கள்விபரம் வருமாறு:-

வற்றாப்பளை அம்மன் கோவில் முகாம்:

க. கந்தசாமி [55) சி. கந்தவனம் (45) வே. கனகசுந்தரம் (55) சி. நாகலிங்கம் [26) ச. குலசிங்கம் (25) ச. தர்மராசா (22] இ. நவரத்தினராசா (34] க. கந்தசாமி (32)

சைவப்பாடசாலை முகாம். மா. மார்க்கண்டு

முள்ளியவளை இந்து த. க. பாடசாலை முகாம்:

வ. நாகமணி (50) மா. சிவஞானம் (24) வே. திருநாவுக்கரசு (32) வே, கணபதிப்பிள்ளை [25) க. பாலசுப்பிரமணியம் (22]

வித்தியானந்தாக் கல்லூரி முகாம்:

க. தர்மலிங்கம் [42], சு முத்துலிங்கம் [40] எம். சின்னத்தம்பி, சி: கண்ணன்.

வற்றாப்பளை றோ. க பாடசாலை முகாம்:

வே. மூர்த்தி, மூ. ராசபூபதி, மூ. சாந்தா, மூ நகுலன், மூ. சுதாகரன், சோ நற்குணபிறைசூடி, ஐ. குணபாலசிங்கம், கு சுந்தராணி, கு உஷாநந்தினி, கு. கலாரஞ்சனி, கு ரஞ்சன், கு. பவானி, சு. செல்வம், செல்வம் அருள்நாயகி, வே. வேலாயுதம், வே பாலராணி, வே நந்தினிதேவி, வே. சுபாஷினி, வே. தர்மினி, பொ. மகாலிங்கம், ம. ரஞ்சினிதேவி, ம. நிலாந்தன், ம. துஷ்யந்தி, இ. பொன்னையா, பொ. நவமணி, பொ அமிர்ஷா, பொ. வாகீசர், பொ துஷியந்தி, வ. அனுஷரத்தினம், அ தயாரூபி, சி திருச்செல்வம், தி. மரியவிஜயகுலன், தி சந்திரன், தி. பிரேம்குமார், பி. குலரட்ணம், ஆ. ராஜேந்திரன், ரா. தவமலர், ரா ரவீந்திரன், பொ. கற்பகம், க பவானந்ததேவி, குமாரசாமி சர்மா, கு. சத்தியபாமா, கு. கனகாம்பர செந்தமிழ்ரூபி, கு பஞ்சாட்சரசர்மா, பிரகலாதசர்மா, கு சரவணபவானந்தன், சி. செல்லையா, செ ஞானம்மா, செ. சத்தியபாமா, செ. யுகந்தினி, செ கிருபாமூர்த்தி, சி. அம்பிகாவதி, ம சிவக்கொழுந்து, சி. கனகாம்பாள், சி. கிருஷாந்தி, கிருஷாந்தன், சி சுகந்தன், வே. துரைராசா, து. ஜெயந்திரன், து நேசம்மா, து ரவீந்திரன், து. சரஸ்வதி, சித்திரா, ரஜனி, ஜுட் அன்ரனி, றொபேட் அன்ரனி, அஜந்தன், ச. மயில்வாகனம், ம. பரிமளம்.

# தகர்க்கப்பட்ட பொலிஸ்நிலைய கட்டிடத்தைச் சுற்றி வேலி!

(ஊர்காவற்றுறை)

குண்டுவைத்து தகர்க்கப்பட்ட ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையக் கட்டிடத்தைச் சுற்றி முட்கம்பி வேலி அமைக்கப்பட்டு வருகிறது.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்துக்கென கட்டப்பட்ட நவீன கட்டிடம்அருகில்பழைய கட்டிடத்திலிருந்து வந்த பொலிசார் யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டதும் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது தெரிந்ததே.

இக்கட்டிடத்தைச்சுற்றி தற்போது வேலி போடப்பட்டு வருவதுடன், கட்டிடத்தைத் திருத்துவதற்கான முன்நீடுகளும் நடந்து வருகின்றன.

# மன்னரில் தொடர்ந்து பதற்றம்
# நெல் அறுவடையைக்கூட செய்ய முடியாத நிலை!

(யாழ்ப்பாணம்)

மன்னரில் நெல்விளைச்சல் இம்முறை அதிகரித்துள்ள போதிலும் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் நடைபெறும் அசம்பாவித சம்பவங்களால் தமிழ் மக்கள்பீதியடைந்து தங்கள் இருப்பிடங்களைவிட்டு வெளியேறிக் கொண்டிருப்பதாலேயே இந்தநிலை ஏற்பட்டுள்ளது

மேலும் நெல் அறுவடை செய்ய வேண்டிய இக்காலத்தில் சில வாய்க்கால்களில் ஓடிக்கொண்டிருக்கும் நீரை மடைறதிந்துவிட்டு விடுவதால் வயல்களில் நீர் நிரம்பிவழிகின்றதாம்.

மற்றும் தொலைபேசிவசதிகள் துண்டிக்கப்பட்டதுடன் மக்கள் நடமாட முடியாதளவுக்கு அராஜகச்செயல்கள் இடம் பெறுகின்றதாகக் கூறப்படுகிறது.

எந்த நேரமும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களின் ஓசையே கேட்டவண்ணமிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பட்டினிச்சாவை எதிர்நோக்கும் ஒரு சூழ்நிலை இங்கு உருவாகி வருவதாகவும் சொல்லப்படுகிறது (மா)

## மரண அறிவித்தல்
## திருமதி ஜெசிந்தா அன்ரனி

திருமதி ஜெசிந்தா இறைபதம் அடைந்தார். இவர் திரு. M. A. N அன்ரனி ஆசிரியர் (புனித பத்திரிசியார் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், லூட்ஸ், சந்திரகுமார் என்போரின் அருமைத் தாயாரும், அமரர் திரு R சொக்கலிங்கம், திருமதி சொக்கலிங்கம் என்பவர்களின் அன்பு மகளும், திரு. S நீற்றஸ் ஆசிரியர் [புனித யாகப்பர் மகாவித்தியாலயம்], திருமதி செலின் மரியதாஸின் சகோதரியும் ஆவர். அன்னரின் பூதவுடல் திங்கட்கிழமை (18-2-85) இன்று மாலை 3 மணிக்கு யாழ் பரியன்னை பேராலய சேமக்காலையில் நல்லடக்கத்துக்காக யாழ் இல 26, மாட்டீன் வீதி இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும.

[1896]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 78ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P O. Box 49, Telegram Tle phone um 22nber389-24126.

# இளம் பெண்கள் கடத்தல்!

[யாழ்ப்பாணம்]

இயக்கத்தின் பெயரைச் சொல்லி விசாரணை செய்வதாகக் கூட்டிச் சென்ற பெண் ஒருவர் மானபங்கப்படுத்தப்பட்டாராம்.

உருப்பராயில் இச்சம்பவம் நடைபெற்றது.

தோட்டத்தில் வேலைசெய்த பெண் ஒருவர் சம்பவதினம் குளிப்பதற்காக கிணற்றுக்குச் சென்றுகொண்டிருந்த பொழுது இனம்தெரியாத நான்கு நபர்கள் அவரைப் பலவந்தமாக சைக்கிளில் ஏற்றிச்சென்று மானபங்கப்படுத்தினராம்.

**யாழ். நகரில்**

அதே வேளையில் யாழ். நகரில் உள்ள தேநீர்க்கடையில் தேநீர் அருந்திக்கொண்டிருந்த இரு இளம் பெண்கள் இனந்தெரியாத நபர்களால் கடத்திச்செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. [மா]

# வேலைக்கார சிறுமி இறந்து கிடந்தாள்!

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நாரந்தனையிலுள்ள வீடொன்றில் வேலை செய்துவந்த சிறுமியொருத்தி இறந்து கிடக்கக் காணப்பட்டார்

இராமன் கனகம்மா (13 வயது) என்னும் இச் சிறுமி மலையகத்தைப்பிறப்பிடமாகக் கொண்டவராவார். இந்த மரணம் சம்பநதமாக விசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு ஜே வி. இம்மானுவேல் தற்கொலை யெனத் தீர்ப்பு வழங்கினர்

இதேவேளை இனந்தெரியாத சில இளைஞர்களால் இந்த மரணம் குறித்து சிலர் இரகசிய விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (ரா)

# கடற்படை...

[1-ம்பக்கம்8ம்கலத் தொடர்ச்சி]

இந்திய மீனவர்களின் கொலையில் இலங்கைக் கடற்படையினர் சம்பந்தப்படவில்லையென்றும், கடற்படையினர்போல் உடையணிந்து, தீவிரவாதிகளே இந்திய மீனவர்களைச் சுட்டுக் கொன்றதாகவும் அமைச்சர் ஹமீட் இச் சந்திப்பின் போது இந்தியத் தூதரிடம் எடுத்துக் கூறினர்

இச்சம்பவத்தால் இராமேஸ்வரம் மீனவர்கள் ஆத்திரமடைந்துள்ளதாகவும் ராமேஸ்வரத்தில் பதட்டநிலை அதிகரித்து வருவதாகவும் இந்தியத் தூதுவர் திரு. சத்வால் அமைச்சர் ஹமீடிடம் எடுத்துக் கூறினர்.

### விடுதலைப் புலிகளின் பிரசுரம்
# "கல்வியைச் சீர்குலைப்பது ஒரு கொலையே"

(யாழ்ப்பாணம்)

"கல்வியைச் சீர்குலைப்பது ஒருகொலையே" என்று தலையங்கமிட்ட துண்டுப்பிரசுரமொன்றை 'தமிழீழ விடுதலைப்புலிகள்' இயக்கம் வெளியிட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"விடுதலை இயக்கங்கள் என்றபோர்வையில் சில சமூக விரோதச் சக்திகள் தமிழ் மக்களின் அன்றாட வாழ்வை நிர்மூலமாக்கும் அநாவசியமான செயல்களில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றன.

'இந்தவகையில் தமிழ்மாணவர்களின் கல்வியைப் பாழடிக்கும் நோக்குடன் பாடசாலை உபரகணங்களைக் கொள்ளையடிப்பதும், சேதப்படுத்தப்படுவதும் இன்னும் கல்விக்கு இடையூறு விளைவிப்பதும்இவர்களது செயற்பாடாய் உள்ளன. இந்தநிலையைத் தொடரவிடாமல் தடுப்பது சமூகப் பொறுப்புள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

"தொடர்ந்தும் இச்செயல்கள் மூலம் கல்வி பாதிக்கப்படுமாயின் எமது சமூகத்திற்கு பாரிய இழப்புகள் ஏற்படும். எமது மக்கள் சமுதாயத்திற்கு அத்தியாவசியமான எதிர்கால மருத்துவ, தொழில்நுட்ப ஆசிரிய சேவைகள் போன்ற பலசேவைகளை இழப்பதுமட்டுமன்றி வருங்கால சமூக அமைப்பில் ஒருதேக்க நிலையையும் பின்னடைவையும் எதிர்நோக்கவேண்டியதுடன் சிந்தனைத் திறனற்ற தன்மையையும் உருவாக்க இது வழிவகுக்கும்.

'மேலும்சில இயக்கங்களால் பரீட்சை குழப்பப்படுவதும் ஆராயப்பட வேண்டியதொன்றாகும். பரீட்சை குழப்பப்பட சில காரணங்களிருப்பினும் நமது கல்வியைச் சீர்குலைக்கத் திட்டமிட்டுவரும் இன்றைய சூழ்நிலையிலும் தொடர்ச்சியான இந்நிகழ்வுகளால் மாணவர் மத்தியில் தோன்றியுள்ள விரக்திநிலையையும் ஒழுக்கச் சீர்குலைவையும் இவ்வியக்கங்கள் கருத்திற்கெடுத்து செயற்படுதல் அத்தியாவசியமானதாகும்,

"தமிழ்மாணவர்களின்உயர் கல்வியை தரப்படுத்தல் மூலம் தடுத்தும், தமிழீழப் பிரதேசத்தின் பல்வேறு தரங்களிலுமுள்ள கல்விக் கூடங்களது அபிவிருத்தியைப் புறக்கணித்துச் செயற்பட்டுவரும் இவ்வேளையிலும் சமூகப்பொறுப்பு மிக்க சக்திகளின் பரந்துபட்ட பங்களிப்புடன் எம்மாணவர்கள் தம் கல்வியைத் தொடர்கின்றனர். இந் நிலையில்கூட அவர்களது கல்வியில் தொடர்ச்சியான சீர்குலைவுகளை மேற்கொள்ளும் சமூகவிரோத சக்திகளைத்தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாதுள்ளது. இச்சக்திகளை தமிழீழ மக்கள் முழுமையாக இனங்கண்டு நிராகரிப்பது உறுதி இவர்களது சமூக விரோதச் செயல்கள் தொடரும்பட்சத்தில் விடுதலையை முன்னெடுக்கும் அனைத்து முற்போக்கு சக்திகளும் இவர்களுக்கெதிரான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம்.

# துணையின்றி இருந்த பெண்களிடம் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

வீட்டில் ஆண்துணையின்றி இருந்த பெண்களை இனந்தெரியாத ஆறுநபர்கள் பயமுறுத்தி அவர்கள் அணிந்திருந்த பெறுமதியான நகைகளைக் கொள்ளை அடித்துள்ளனர்.

குருநகர் றெக்கிளமேசன்வீதியிலுள்ள ஜோனஜூலியஸ்என்பவர் வீட்டில் இக்கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றது.

வீட்டின் கதவை உடைத்து உட்புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்த பெண்கள் அணிந்திருந்த நகைகளைக் கொள்ளையடித்துச் சென்று விட்டார்களாம். (மா)

# பல்கலைக்கழக திருத்த சட்டமூலம் இன்று அமுல்

(கொழும்பு)

பல்கலைக்கழக அமைப்பில் பலமாற்றங்களைக் கொண்டு வரவுள்ள பல்கலைக்கழக திருத்தச் சட்ட மூலம் இன்று முதல் அமுலுக்கு வருமென்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

# கப்பல் மூழ்கியது! இலங்கையர் உட்பட 5 பேரைக் காணவில்லை!

(லண்டன்)

மத்தியதரைச்கடலில் மூழ்கிய சைப்பிரஸ் கப்பலொன்றிலிருந்த ஒரு இலங்கையர் உட்பட 5 மாலுமிகளைக் காணவில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது

இந்தக்கப்பலிலிருந்த இந்திய மாலுமிகள் 5 பேர் நீந்திச் சென்று உயிர்தப்பியதாகவும் கூறப்பட்டது.

சிமெந்து ஏற்றிக்கொண்டு சென்ற கப்பலே இவ்விதம் விபத்துக்குள்ளானது.

# கொழும்பில் அரபுலீக் தூதுக் குழு

[கொழும்பு]

அரபுலீக் தூதுக் குழுவொன்று இலங்கை வந்துள்ளது. இவர்கள் நேற்று வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. சி எஸ் ஹமீத்தை சந்தித்தனர்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவை இன்று இத்தூதுக்குழுவினர் சந்திக்கவுள்ளனர்.

# தி.மு.க சட்டசபைத் தலைவர்

சென்னை பெப் 17

தி மு.க. வின் சட்டசபைத் தலைவராக திரு பி அன்பழகனும். துணைத்தலைவராக திரு. நாஞ்சில் மனோகரனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

திரு. ரகுமான்கான், திரு கோவை எம். ராமநாதன் ஆகியோர் கட்சியின் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

# ஜெயகுலராசா தலைமையில்
## அகதிகளுக்கு உதவி

[சென்னை]

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாக வரும் தமிழர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்கவென 'மஸ்ட்' என்ற மருத்துவ உதவிப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது!

இந்த 'மஸ்ட்' பிரிவுக்கு டாக்டர் ரி டபிள்யு, ஜெயகுலராசா தலைமை தாங்குகிறார். இப்பிரிவில் இந்தியர்கள் உட்பட இலங்கையர்கள் பலர் அங்கம் பெறுகின்றனர்.